# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1436/8 - 2006 මාර්තු 13 වැනි සඳුදා - 2006.03.13

1436/8 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 13 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) – பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதாரச் சேவைக்குறிப்பு**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1980, ஐப்பசி 31 ஆம் திகதிய 113 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட, 1978, ஐப்பசி முதலாம் திகதிய இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதாரச் சேவைக்குறிப்பின், 2005, மாசி 14 ஆம் திகதிய 1380/3 ஆம் இலக்கத்தையுடைய அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட திருத்தத்தின் (8) (உ), (9) (i) (இ), (10) ஆம் பிரிவுகள் அமைச்சரவையின் ஆணையின் பிரகாரம் இத்தால் திருத்தப்படுகின்றன.

எஸ். ஜே. பத்திரண,
செயலாளர்,
தோட்ட உட்கட்டமைப்பு மற்றும்
கால்நடை அபிவிருத்தி அமைச்சு,

இல. 45, சாந்த மைக்கல் வீதி,
கொழும்பு 3,
2006, பங்குனி 10.

(8) (உ) மிருக வைத்தியத்துறை பட்டதாரிகள், விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் இலங்கை மிருக வைத்திய சபையிடமிருந்து பதிவினைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

(9) (i)(இ) விண்ணப்பதாரிகள், பொது அறிவு வினாப்பத்திரம் ஒன்றிற்கும் பதவியுடன் தொடர்புடைய விடயதான வினாப்பத்திரம் ஒன்றிற்கும் தோற்றுதல் வேண்டும். அத்துடன் இவ் வினாப்பத்திரங்களுக்கு தோற்றி அவர்கள் பெற்றுக் கொண்ட மொத்தப் புள்ளிகளின் வரிசை அடிப்படையிலும், குறித்த பதவிக்காக நிலவும் வெற்றிடங்களின் அடிப்படையிலும் விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சை ஒற்றிற்காக அழைக்கப்படுவர். அதன் பிரகாரம் குறித்த பதவிக்கான ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்படும். நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது.

(10) வகுப்பு II தரம் II இற்கான மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்புகள் :

(1) மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு முறைமை :

கால்நடை உத்தியோகத்தர் பதவிக்கான வெற்றிடங்களில் 50% மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பின் மூலம் நிரப்பப்படும்.

(அ) விண்ணப்பதாரிகள் பொது அறிவு வினாப்பத்திரம் ஒன்றிற்கும் பதவியும் தொடர்புடைய விடயதான வினாப்பத்திரம் ஒன்றிற்கும் தோற்றுதல் வேண்டும்.

(ஆ) பொது அறிவு வினாப்பத்திரத்திலும் பதவியுடன் தொடர்புடைய விடயதான வினாப்பத்திரத்திலும் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளின் வரிசை அடிப்படையிலும், குறித்த பதவிக்காக ஒதுக்கப்பட்ட வெற்றிடங்களின் அடிப்படையிலும் விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சை ஒன்றிற்காக அழைக்கப்பட்டு ஆட்சேர்ப்பு இடம்பெறும். நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது.

(ii) *மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்புக்கான தகைமைகள் :*

இலங்கை நால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை அல்லது மாகாண அரசாங்க சேவையிலுள்ள கால்நடை அபிவிருத்தி உபதேசகர் சேவை அல்லது இலங்கை தொழில்நுட்ப சேவைகளில், வகுப்பு I இல் 4 வருட திருப்திகரமான சேவையையோ அல்லது விசேட வகுப்பிலோ உள்ள, 2 வருட கால்நடை வளர்ப்பு/விவசாய டிப்ளோமாவையும் கொண்ட, கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் / ஆராய்ச்சி உதவியாளர்கள்/மாகாண அரசாங்க சேவையிலுள்ள கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்.

அல்லது

5 வருட திருப்திகரமான சேவைக் காலத்தையும் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் கால்நடை வளர்ப்பு/விவசாய விஞ்ஞானத்துறையில் 4 வருட பட்டப்படிப்பையும் பூர்த்தி செய்த, கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தில் பணிபுரியும் கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர்/ஆராய்ச்சி உதவியாளர்.

3-639

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.